IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியத்தில் பெண்களின் இசை உணர்வு

திருமதி.மு.பூர்ணிமா (PHDTAM19P643)

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழியல் துறை

அன்னைத் தெரசா மகளிர் பல்கலைகழகம்

கொடைக்கானல்

**முன்னுரை:-**

உலகம் தோன்றிய காலத்திலே மிருகம் போலத் திரிந்து வாழ்ந்த ஆதி காலத்து மனிதன் நாகரிகம் அடைந்து நற்பண்பு பெற்ற காலம் முதல் இசைக்கலையை வளர்த்து வருகின்றான். துன்பமும் துயரமும் சூழ்ந்த மனித வாழ்க்கையில் சிறிது ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டும், இசையைப் பாடியும், இசையில் திளைத்தும், இசையில் மூழ்கியும் மகிழ்கின்றான். மனித குலத்தின் வரப்பரசாதமாக இசைக்கலைத் திகழ்கின்றது. எனவே பெண்ணின் இசைக்கலை திறனும் தனக்கும் சமூகத்திற்கும் எவ்வாறு மகிழ்ச்சியாக்குகின்றது என்பதை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**இசை வரையறை:-**

பண்டையத் தமிழர்கள் முத்தமிழான இயல், இசை, நாடகம் இம்மூன்றையும் போற்றி வளர்த்தனர். இத்தமிழுள் இரண்டாம் நிலையில் உள்ள இசை நுண்கலையாக திகழ்கின்றது. இசை என்பது “இசைப்போரையும் கேட்போரையும், உணர்வினால் இசைவிப்பது இசையாகும்” என்று இசையினை பற்றி முனைவர் பாக்யமேரி காலம்தோறும் தமிழர் கலைகள் என்ற நூலின் வழியாக சுட்டி காட்டுகின்றார். மேலும் தொல்காப்பிய நூற்பாவில் “இசைப்பு இசையாகும்” என்று இசைக்கு விளக்கமளிக்கின்றது. இசையின் ஆற்றல் பலரும் அறியும் வண்ணம் உள்ளது. இவ்விசைக்கலை “தொன்றுதொட்டு இசையினை தெய்வீகப் பொருளாகக் கருதி வருகின்றனர் தமிழர். தமிழ்நாட்டின் புனிதமான விழுமிய பொருளாக இருக்கிறது இசைச் செல்வன்” என்று இசையின் சிறப்பினை மயிலை சீனி வேங்கடசாமி வெளிப்படுத்துகின்றார்.

பண்டையக் காலத் தமிழர் சங்கம் அமைத்துத் தமிழை ஆராய்ந்தார்கள். அவற்றில் இயற்றமிழோடு இசைத்தமிழையும் ஆராய்ந்தனர் “இசைக்கலையை ஆராய்ந்த தமிழர் அதை ஏழாகப் பிரித்து ஏழு பெயர்களை சூட்டினார்கள் அவை விளரி, தாரம், குரல், தத்தம், கைக்கிளை, உழை என்பனவாகும்” இவ்வாறு இசை வளர்ச்சி மேன்மேலும் சிறப்புடையதாக திகழ்ந்தது. பின் காலம் செல்ல செல்ல பெயர்களை மாற்றி தற்போது “சட்ஜம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்று புதுப் பெயர்கள் கூறுகிறார்கள் இவற்றின் எழுத்துக்கள் ச ரி க ம ப த நி என்பவையாகும்” எனவே கால மாற்றத்தால் பல புதிய இசை நுட்பங்கள் உருவாகி வருகின்றன. கடவுளுக்கும் இசைக்கும் ஒரு நேருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியவன் மனிதனாவான்.

தமிழர் தம் குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாக்களையும், ஊசல் பாக்களையும் விளையாட்டும் பருவத்தில் அம்மானை, சிறு சிறு இசையுடன் கலந்த பாக்களையும் கேட்டும் பாடியும் மகிழ்ந்தனர். உலக்கை கொண்டு குற்றும் தொழிலுக்குரிய பாட்டு வள்ளைப்பாட்டு என்ற பெயர் பெற்றது. ஏற்றப்பாட்டு ஏற்றம் கொண்டு நீர் இறைப்பவன் பாடியது. தொழில்களை மேற்கொள்ள வேலைப்பளு தெரியாமலும் இருக்க இசையுடன் கூடிய பாடலினை பாடி இன்பம் அடைந்தனர்.

பெண்களின் இசைக்கலையுணர்வு:-

இசையும் பாட்டும் பின்னிபினைந்த ஒன்றாகும். இவற்றில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தாலாட்டில் தொடங்கி ஒப்பாரிப்பாடல்கள் வரை பெண்கள் திறம் பெற்றவர்களாக உள்ளனர். இசைக்கும் பாட்டுக்கும் உரித்தான குரல் வளம் பெண்களுக்கு இயற்கையாகவே உள்ளன. பெண்களின் பிறப்பு முதல் வாழ்வில் ஒவ்வொரு நகர்விலும் இசைக்கலை இயைந்து காணப்படுகின்றது. குடும்பம், சமூகம் இவற்றின் மகிழ்ச்சிக்கு இசைக்கலை சிறந்த ஒரு துணையாக நிற்கின்றது. அதன் முழுமைக்கும் சாத்தியமானவள் பெண் ஆவாள். எனவே இலக்கியங்களில் பல நிலைகளில் பெண்களின் இசை உணர்வு பதிவாகியுள்ளது. சங்க கால மகளிர் கவின் கலைகளில் வல்லவராகத் திகழ்ந்தனர். “வாழ்க்கையில் மகிழ்ச்சி விளைக்கும் கலைகள் பலவற்றையும் தமிழ் மகளிர் ஐந்தாம் வயது நிரம்பிப் பன்னிரெண்டாம் வயது முடியவுள்ள ஏழாண்டுகளிலும் நன்றாகக் கற்றுணர்ந்தனர்” என்கின்றார் க.வெள்ளை வாரணனார். எனவே இசைப்பயிற்சியும் மகளிருக்கு இன்றியமையாததாகக் கருதப் பெற்றனர். இசைபாடுதற்கு இனிய குரல் படைத்தவர்கள் பெண்கள் ஆவர், இசைக்கலையினை வளர்த்தலில் ஆடவரைக் காட்டிலும் பெண்டிரே முதலிடம் பெற்றனர். “இசைக்கலையில் வல்ல மகளிர் தம் இசையின் இனிமையினால் யானை முதலிய வலிய விலங்குகளையும் அடக்கியாளும் திறம் பெற்றிருந்தனர்” என்று மகளிரின் இசைச்சிறப்பினை சுட்டிக்காட்டப்படுகின்றது. இதன் படி சங்க இலக்கியங்கள் மற்றும் பிற இலக்கியங்கள் பெண்களின் இசைக்கலையுணர்வு புலனாகின்றது.

எட்டுத்தொகை நூல்களில் பெண்களின் இசைக்கலை வள்ளைப்பாட்டு:-

மகளிரில் ஒருவர் இரு கைகளும் மாறி மாறி வர உலக்கை மூச்சு போடும் போது இருவர் சேர்ந்து, இருவரது நான்கு நான் கைகளாலும் உலக்கை குற்றும் போது வளையல் பண்ணிசை பிறக்கும் இதற்கு வள்ளை என்று பெயராகும். இப்படிக் குற்றும் போது பாடலும் பாடுவர் இதற்கு வள்ளைப் பாட்டு என்று பெயராகும். இதனை குறுந்தொகையில் தலைவியானவள் பரந்த அடியினையுடைய உரலித்தில்

பகுத்து வாயாற்பாடும் உலக்கை பாட்டு ஆகும். இப்பாட்டினை கேட்டுக்கும் போது அருகில் இருந்தவர்கள் எக்குறையும் கூறாது நின்றனர் இவ்வாறு இசையும் பாட்டும் தன்னையும் பிறரையும் மகிழ்ச்சியாக்குகின்றது என்ற நிலையில் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

"பாவடி உரல பகுவாய் வள்ளை

ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப"

என்ற குறுந்தொகைப் பாடலில் பெண்களின் இசையுணர்வு சிறப்பிக்கிறது. வள்ளைப்பாட்டு என்ற இலக்கிய வடிவத்தினை தொல்காப்பியர் நேரடியாகச் சுட்டவில்லை ஆனால் உரையாசிரியர்களே வள்ளைப்பாட்டின் வடிவத்தைக் கூறுகின்றனர். வஞ்சித்திணையில் வள்ளை என்பது நெல் முதலியவற்றை உரலில் இட்டு உலக்கை கொண்டு குற்றும் மகளிர் தாம் பாடும் பாடல்களில் வேந்தனும் வெற்றித் திறத்தை போற்றியுரைக்கும் முறையில் அமைந்த புறத்துறையாகும்.

"குற்றாச் சிறப்பின் கொள்ளை வள்ளை வள்ளையும்"

இப்பாடலின் மூலம் வெற்றி, மகிழ்ச்சி, வேந்தனை மேன்மைப் படுத்துவது என்று பெண்கள் தங்களின் எண்ணக் கருத்துகளை வள்ளைப்பாட்டு எனும் கலை மூலம் சுட்டிக்காட்டியுள்ளன.

கலித்தொகையில் வள்ளைப்பாட்டு:-

கலித்தொகையில் வள்ளைப்பாட்டினை உலக்கைப்பாட்டு என்று கூறப்படுகின்றது. தோழிகள் உரையாடுவது போல் உலக்கைப்பாட்டு அமைந்துள்ளது. தோழி நீ வாழ்வாயாக நாம் பாடுவோம் வா எங்ஙனம் எதைப்பற்றி என்று கூறுவது போல் உள்ளது. அசைகின்ற மூங்கிலினது நெல்லைப் பாறையாகிய உரலிலே இட்டு வலிமையுடைய யானைக்கொம்பு உலக்கையாகி குற்றிப் பாடுவோம் என்று கலித்தொகைப்பாடல் விளக்குகின்றது.

"பாடுகம் வா வாழி தோழி வயக்களிற்றுக்

கோடுலக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா

ஆடுகழை நெல்லை அரையுரலுட் பெய்திருவாம்

பாடுகம் வாவாழி தோழிநற் தோழிபாடுற்று"

முற்றிய திணைக் கதிர்களை சந்தன மரத்தால் ஆன உரலில் இட்டு முத்து நிறைந்த யானைத் தந்தத்தால் குற்றியத்தையும் தோழியர் இருவர் ஐவகையான வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே இட்டு புலியை கொன்ற வலிமை உடைய யானையின் தலையினை ஏந்த கொம்பாலும் சந்தன மரத்தினால் ஆன உலக்கையால் குற்றி முருகனை புகழ் பாடுவோம் என்று வள்ளைப்பாட்டினை பாடினர்.

"முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்

வகைசால் உலக்கை வயின் வயின் ஒச்சிப்

பகையில் நோய் செய்தான் பயமலையோத்தி

அகவினம் பாடுவாம் நாம்"

கலி, பக் - 114, 115

"வேங்கை தொலைத்த வெறி பொறி வாரணத்

தேந்து மருப்பின் இனவன் பிமிர்பூதுஞ்

சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்

ஐவன வெண்ணெல் அரையுரலும்"

கலி, ப - 128

எனவே கலித்தொகையில் பல பாடல் பெண்களின் வள்ளைப்பாட்டி சிறப்பிற்கு சான்று அளிக்கின்றது.

அகநானூற்றில் வள்ளைப்பாட்டு:-

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் வள்ளைப்பாட்டினைப்பாடி உலக்கையிடும் மகளிர் காட்சிப்படுத்தப்படுகின்றனர். அழகிய கூந்தலையும் சிறிய இடையினையும் உடைய பெண்கள் பெரிய வயலிடத்து விளைந்த நெல்லினை வளைந்த கதிரை முறித்துப் பசிய அவலை இடிக்கும் வயிரமுடைய உலக்கையினை விரைந்து இடித்தனர் என்பதை பாடலின் வழியாக அறியலாம்.

"கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்

பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்

பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்"

வள்ளைப்பாட்டினை தொழிற்பாடல் என்றும் கூறலாம் உழைக்கு வர்க்கத்தினர் தங்கள் தொழில்களை மேற்கொள்ளும் போது பாடல் பாடுவதை வழக்கமாக கொண்டிருப்பார்கள் சங்க இலக்கியங்களில் பெண்களின் இசைப்பாட்டு கூறுகளின் எச்சங்கள் இக்காலத்தின் இசை பாடலுக்கு முன்னோடியாக கூறலாம்.

புறநானூற்றில் வள்ளைப்பாட்டு:-

உழுவார் உலகத்தார்க்கு அச்சாணியானவன் என்கின்றனர் வள்ளுவர். அத்துணைச் சிறப்பு வாய்ந்த உழவுத்தொழிலாகும் செந்நெல்லினை அறுத்து கரும்பினைக் கட்டி அந்த இடத்தில் உலக்கையினை நன்கு கழுவி சுத்தம் செய்து வைத்துள்ளதை.

"அலங்கு செந்நெல் கதிர் வேயந்தவாய்

கரும்பின் கொடிக் கூரை சாறு கொண்டகளம்

போல் வேறுவேறு பொலிவு தோன்ற குற்றானா

உலக்கையால் கலிச்சுமை வியாலங்கன்"

இப்பாடலின் வழியாக அறுவடை செய்யும் நிகழ்வினை விழாவாக சிறப்பித்துள்ளனர். உலக்கையினையும் வழிபாட்டுக்குரிய கருவியாக பெண்கள் வழிபட்டுள்ளன.

நாட்டுப்புற இலக்கியங்களில் வள்ளைப்பாட்டு காணப்படுகின்றது. பாட்டிலக்கியமாக இருந்த வள்ளைப்பாட்டு ஏட்டிலக்கியமாக மாறியது.

"கங்காணி ஐயாவே வாருமையா

ஒரு காரியம் செல்லுறேன்

கேளுமையா

சில்லறை கங்காணி சேவுகமே நீங்க

சீமைக்குப் போய்வாங்க அக்கரையா

கங்காணி ஐயாவே பயப்படாத

கப்பல் கடல்கரை வந்து சேரும்

ஆளுங்க அன்புக இல்லாட்டி தொரை

வட்டிகள் வாசிகள் போட்டெடுப்பார்"

என்று மலையகப் பெண்களின் உலக்கைப் பாடலினை சாரல்நாடன் சான்று அளிக்கின்றார்.

பத்துப்பாட்டில் வள்ளைப்பாட்டு:-

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மலைபடுகடாம் வள்ளைப் பாட்டின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. பல்வகையான ஓசைகள் கேட்கும் அந்நகரில் திணையை உரலில் இட்டுக் குற்றுகின்ற பெண்களின் வள்ளைப்பாட்டு ஓசையும் கேட்கின்றது அதனை இப்பாடலின் வழியாக உணரலாம்.

"திணைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்"

வள்ளைப்பாட்டின் திறத்தினை பல இலக்கியங்கள் சுட்டிகாட்டுகின்றன அவற்றில் முத்தொள்ளாயிரப் பாடநூல் பாண்டியனைக் கண்டு காதலுற்ற ஒரு பெண் தோழிகளைத் தூதுவிட்டு, அவனை மணக்கலாம் என்று எண்ணுகிறாள். மணமான பெண்கள் எல்லாம் வள்ளைப்பாட்டு பாடிக்கொண்டு இருக்கின்றனர். அதனைப்போல் தானும் பாண்டியனின் கொடி, தேர் அவனது மணிமுடி போன்றவற்றைப் புகழ்ந்து வள்ளைப்பாட்டு பாடுவதோ என்று ஏங்குகின்றாள் என்பதை இப்பாடலின் வழியாக புலனாகின்றது.

"கொடிபாடித் தேர்பாடிக்

கொய்தண்தார் மாறன்

முடிபாடி முத்தாரம்

பாடித் தொழிஉலக்கை

கைம்மனையில் ஓச்சப்

பெறுவெனோ? யானும் ஓர்

அம்மனைகை; காவல்

உளேன்"

மேற்கண்டவற்றின் வழியாக சங்க இலக்கியங்களில் பெண்களின் இசை தொடபான கலை உணர்வு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

முடிவுரை:-

இசையின் சிறப்பினை அறிந்த மகளிர் அத்திறத்தினை எடுத்துரைக்கும் விதமாக வள்ளைப்பாட்டினை வெளிப்படுத்திமைக்கு சான்று பகர்கின்றது. வேந்தனை புகழ்வதில் தொடங்கி காதல், வீரம் உழவன் வளம் என பல்வேறு நிலைகளில் வள்ளைப்பாட்டினை பாடியுள்ளனர். பெண்களின் இசைத்திறம் குடும்பம், சமூகம் ஆகியவற்றிக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது என்பது இவ்வாய்வின் நோக்கம் அமைந்துள்ளது.

துணை நூற்கள்:-


எப். பாக்கியமேரி — காலம் தோறும் தமிழர் கலைகள்
அறிவுப்பதிப்பகம்
உடுமலைப்பேட்டை
2008

தமிழண்ணல் — தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

நாகராசன்.வீ.உ.ஆ — குறுந்தொகை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
சென்னை
முதற்பதிப்பு – 2004

இளம்பூரணர் (உ.ஆ) — தொல்காப்பியம் பொருளதிகாரம்
சுரதா பதிப்பகம்
சென்னை
முதற்பதிப்பு - 2005

சாமிநாதையர்.உ.வே (ப.ஆ) — புறநானூறு மூலமும் உரையும்
உ.வே.சாமிநாதையர் நுல் நிலையம்
சென்னை
முதற்பதிப்பு – 2005